**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR**

S.C. Case No : 13/2021

Deposition of witness for Prosecution : Pw5

Defence :

Name : Boobalan
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed and on date 27.10.2021 in accordance with the provision with the Act of 1983.

முதல் விசாரணை :

நான் திருப்பத்தூரில் குடியிருக்கிறேன். நான்தற்பொழுது ஜேஎம்ஜே கம்பெனியில் சிஎன்சி மிஷின் ஆப்பரேட்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐயும் ஆஜர் எதிரியையும் தெரியும். இரவு 11 மணிக்கு 407 வண்டி எங்கள் கம்பெனிக்கு 28.12.2012 அன்று வந்தது. உடனடியாக பொருட்களை இறக்கும்படி ஆஜர் எதிரி சொன்னார்.நாங்கள் முடியாது என்று சொன்னோம். நாங்கள் எண்ணி தான் இறக்க முடியும் என்று சொன்னோம். அதனால் முடியாது என்று சொலிவிட்டு எதிரி வண்டியை எடுத்து சென்றுவிட்டார். அ.சா.1 உரிமையாளருக்கு தகவல் சொன்னார். அரை மணி நேரம் கழித்து டிஎன்20ஆர்2364 வாகனம் கம்பெனிக்குள் திரும்ப வந்தது. பொருட்களை இறக்கிவிட்டோம். எதிரி அ.சா.1 ஐ பார்த்து தேவடியா பசங்க கம்பெனியில் வந்ததால் தான் லேட் ஆகிறது என்று சொன்னார். அ.சா.1 எதிரயை வாயை மூடிக்கொண்டு போ என்று சொன்னர். எதிரி வண்டி கதவை திறந்தார். அருவாள் எடுத்து வந்து அ.சா.1 ஐ இடது கழுத்தில் வெட்டினார். நாங்கள் அ.சா.1 ஐ பார்த்தோம். எதிரி சுவர் எறி குதித்து தப்பித்து ஓடிவிட்டார். வழியில் வரும் வண்டியை நிறுத்தி அ.சா.1 ஐ இஎஸ்ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அதன்பிறகு நாங்கள் கம்பெனிக்கு வந்துவிட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

நான் கம்பெனியில் 2012க்கு முன்பு 3,4 வருடம் வேலை பார்த்தேன். அவரை சம்பவத்றிக்கு முன்பு 2 ஆண்டுகளாக எனக்குத் தெரியும். 2 ஆண்டுகளாக எதிரிக்கும் எனது கம்பெனிக்கும் கம்பெனியில் வேலை செய்யும் ஆட்களுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. எதிரி தாண்டி் குதித்து சென்றதாக சொல்லும் காம்பவுண்டு சுமார் 5 அடி இருக்கும். எதிரிவந்த வாகனம் கம்பெனிக்குள் நின்று கொண்டிருந்தது. கம்பெனிக்குள் இரவு பணியில் சுமார் 24 பேர் வேலை செய்தார்கள். வண்டி நின்று கொண்டிருந்த இடத்திற்கு முன்பு கம்பெனி ஷட்டர் உள்ளது. ஷட்டர் திறந்திருந்தது. எதிரி ஷட்டர வழியாக சென்று பின்புறம் காம்பவுண்டை ஏறி குதித்து ஓடி விட்டார். எதிரி ஓடியதை நான் பார்த்தேன். எதிரி பின்புற காம்பவுண்டு சுவரை எதிரி குதித்து ஓடியதை நான் பார்த்தேன். சம்பவம் நடந்த இடத்தில் நான் ஆரோக்யராஜ்,சதீஷ் ஆகியோர் இருந்தோம். அப்பொழுது அ.சா.1ம் அங்கிருந்தார். எங்களைதவிர 24 பேர் கம்பெனியில் வேலை பார்த்தார்கள். வேலை பார்த்தவர்கள் 30 அடி தூரத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள். நாங்கள் அனைவரும் ஷட்டருக்குள் ்தான் வேலை பார்த்துக்கொண்டிருந்தோம்.சம்பவம் ஷட்டருக்குள் வைத்து நடைபெற்றது. நான் சதீஷ் சரவணண் , ஆரேக்ய ராஜ் ஆகியோர் 2 வடமாநிலத்தவருடன் சேரந்து எதிரயை அடித்தோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சேரந்து தான் எதிரி வாகனத்தை சேதப்படுத்தினோம் என்று சொன்னால் சரியல்ல.அ.சா.1க்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்த விரோதமும் இல்லை.